KANTHASAY SURESH KANTHASAY SURESH KANTHASAY SURESH KANTHASAY SURESH KANTHASAY

# 2024 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வினாத்தாள்





ஆசிரியர். திரு.க.சுரேஸ்
மட்/மட்/கிரான்குளம் விஷ்ணு வித்தியாலயம்

பகுதி i



மாணவர் பெயர் :- 1 நேரம் :- 1 மணித்தியாலம்

1) பின்வரும் உருவில்  ஐயும்  ஐயும்  ஐயும் குறிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் முறையே.





1) B, A, C

2) A,D,B

3) B, E, C

2) பின்வரும் உரு பற்றிய சரியான கூற்று.




1) ஒரு ஆசிரியர் வெண்பலகையில் எழுதிக் கொண்டிருக்கிறார்.

2) கடிகாரத்தில் நேரம் 10.00 மணியைக் காட்டுகிறது.

3) ஒரு கடிகாரமும் ஒரு நாட்காட்டியும் காணப்படுகின்றன.

3) கீழே உள்ள படத்தில் பூ, பூ, மரம், பூ, பூ என்ற ஒழுங்கு முறையில் வைப்பதற்கு எத்தனை படங்களை மாற்ற வேண்டும்.



1) 3 2) 4 3) 2

4) பூச்சரமொன்றில் ரோசா, செவ்வந்தி, மல்லிகை, செவ்வந்தி, வெட்சி என்ற ஒழுங்கில் பூக்கள் தொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறுள்ள சரத்தில் உள்ள பூக்களின் எண்ணிக்கை 167 எனின் செவ்வந்திப் பூக்களின் எண்ணிக்கை யாது?


1) 33 2) 67 3) 34

5) ஒரு கட்டடம் கட்டுவதற்கு 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 12 மாதங்களில் கட்டடம் முடிக்கப்பட்டது. எனில் கட்டடம் முடிக்கப்பட்ட ஆண்டு யாது?

1) 2021 2) 2022 3) 2023

6) இலங்கையில் மு.ப 11.00 ஆக இருக்கும் போது அவுஸ்ரேலியாவில் பி.ப 4.00 மணி ஆகும். இலங்கையில் மு.ப 7 மணியாக இருக்கும் போது அவுஸ்ரேலியாவில் நேரம் என்ன?

1) ந.ப 12.00 2) ந.இ 12.00 3) பி.ப 6.00

7) 

இவ்வுருவில் உள்ள சதுரங்கள் எத்தனை?


1) 12 2) 16 3) 14

8) ஒரு புத்தகம் ஒன்றில் 7, 8, 74, 75, 101, 102, 21 ஆகிய இலக்கங்கள் உடைய பக்கங்கள் கிழிக்கப்பட்டுள்ளன. எனின் கிழிக்கப்பட்ட தாள்களின் எண்ணிக்கை யாது?


1) 7 2) 5 3) 14


9) சாதாரண வருடம் ஒன்றில் மார்ச் உள்ள திகதிகளின் கூட்டுத்தொகை யாது?

1) 992 2) 365 3) 496

10) 


தரப்பட்ட நெய்யரியில் எல்லா நிரல்களிலும் நிரைகளிலும்  என்னும் மூன்று உருக்களும் இடப்படுமாறு அடைப்புக்களை நிரப்புதல் வேண்டும். எனின் ? உள்ள இடத்தில் வரவேண்டிய உரு யாது?

1)  2)  3) 

11) 


பின்வரும் வளையங்களை வெவ்வேறாக்குவதற்கு குறைந்தது எத்தனை வளையங்களை வெட்ட வேண்டும்.

1) 4 2) 2 2) 3

12) **தாரு ஒரு பண்ணையாளரிடம் சென்று அங்குள்ள பிராணிகள் தொடர்பாக விசாரித்தாள். அதற்கு பண்ணையாளர் பின்வருமாறு கூறினார். 12 ஐ தவிர மற்றயவை கோழிகள், 6 ஐ தவிர மற்றயவை ஆடுகள், 10 ஐ தவிர மற்றயவை மாடுகள் எனின் அங்குள்ள கோழிகள் எத்தனை?**

**1) 8 2) 4 3) 2**


KANTHASAMY SURESH 0775887044



13) இவ்வுருவில் பெரிய செவ்வகம் ஒன்றை வெட்டி எடுத்த பின்னர். மிகுதியாக வரும் துண்டில் வெட்டி எடுக்கக் கூடிய சிறிய சதுரங்கள் எத்தனை?

1) 6 2) 7 3) 8

14)





**இவ்வுரு தொடர்பான பிழையான கூற்று.**

1) D என்பவர் பிட்டு, இடியப்பம் இரண்டையும் உண்கின்றார்.

2) B என்பவர் பாண், பிட்டு, இடியப்பம் ஆகிய மூன்றையும் உண்கின்றார்.

3) A என்பவர் பிட்டை மட்டும் உண்கின்றார்.

**மூன்று நண்பர்கள் நூலகத்திற்குச் சென்ற வெவ்வேறுபட்ட பாதை கீழே தரப்பட்டுள்ளது.**




15) குறைந்த வளைவான பாதை வழியே பயணம் செய்த நண்பன் யார்?


1) சுதா 2) பவி 3) ராமு

16) கூடிய தூரம் பயணம் செய்து நூலகத்தை அடைந்தவர் யார்?

1) சுதா 2) பவி 3) ராமு


**17, 18 ஆம் வினாக்களுக்கு ? இடப்பட்ட அடைப்புக்குள் வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்து கோடிடுங்கள்.**

17)




1) 22
2) 25
3) 26

18)





1) 15
2) 19
3) 18

19) நேற்று முன் தினம் சனிக்கிழமைக்கு 4 நாள் கழிந்து வரும் நாள் ஆகும். எனின் நாளை மறுநாள் என்ன கிழமை.

1) சனிக்கிழமை 2) வியாழக்கிழமை 3) திங்கட்கிழமை

20)




தரப்பட்ட தாயக்கட்டையில் ஒன்றுக்கொன்று எதிராகவுள்ள பக்கங்களில் உள்ள புள்ளிகளின் கூட்டுத்தொகை 7 ஆகும். இத்தாயக்கட்டையானது அம்புக்குறி வழியே உருளும் போது கட்டம் A இல் படும் புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

1) 3 2) 6 3) 4

**கீழே உருவில் தரப்பட்டுள்ள பெரிய சதுரமுகியின் சகல பக்கங்களுக்கும் நிறந்தீட்டப்பட்டுள்ளது. கோடுகள் வழியே வெட்டி பெரிய சதுரமுகியை வேறுபடுத்தும் போது சிறிய சதுரமுகிகள் பெறப்படும். இதை அடிப்படையாகக் கொண்டு 21, 22 ஆம் வினாக்களுக்கான விடையினைத் தெரிவு செய்யுங்கள்.**



21) இச்சதுரமுகியில் இரண்டு பக்கங்கள் நிறந்தீட்டப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?

1) 12 2) 24 3) 8

22) இச்சதுரமுகியில் நிறந்தீட்டப்படாத சிறிய சதுரமுகிகள் எத்தனை?

1) 6 2) 24 3) 8

23) 21 படிகள் கொண்ட படிக்கட்டில் டுவான் முதல் படியிலும் பவி 21 ஆம் படியிலும் நிற்கின்றனர். டுவான் 2 படிகள் வீதம் ஏறும்போது, பவி 3 படிகள் வீதம் இறங்கினால், இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பார்கள்?

1) 13 2) 9 3) 10

24) அலங்காரம் ஒன்றில் உள்ள சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய நிற மின்குமிழ்கள் வெவ்வேறு நேர இடைவெளியில் ஒளிர்கின்றன. சிவப்பு 5 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் பச்சை 10 நிமிட நேர இடைவெளியிலும் நீலம் 15 நிமிட இடைவெளியிலும் ஒளிர்கின்றன. இவை மூன்றும் பிற்பகல் 2.00க்கு ஒரே தடவையில் ஒளிருமாயின் இவை 2வது தடவையாக எத்தனை மணிக்கு ஒரே நேரத்தில் ஒளிரும்?

1) பி.ப 3.00 2)பி.ப 2.30 3) பி.ப. 4.00

KANTHASAMY SURESH 0775887044



25)அருகில் உள்ளவாறு சதுரமுகி வடிவிலான பெட்டியானது சம அளவான இரண்டு கறுப்பு நிற நாடாக்களினால் சுற்றி ஒட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நாடாவை ஒட்டுவதற்கு 64 cm நாடா தேவைப்பட்டது எனின், சதுரமுகிப் பெட்டியின் உயரத்தின் அரைவாசியின் அளவு யாது?

(1) 4 cm (2) 8 cm (3) 6 cm

26) காலை 7.00 மணிக்கு புறப்பட்ட பேருந்து காலை 9.15 மணிக்கு பயணத்தை முடித்தது. பேருந்து பயணித்து ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒருமுறை பேருந்து நிறுத்தப்பட்டு பயணிகள் ஏறி, இறங்கினர் எனின் பேருந்து பயணிக்கும் போது எத்தனை முறை நிறுத்தப்பட்டிருக்கும்.

1) 6 2) 8 3) 4

27) வட்டவடிவ மைதானமொன்றில் சம இடைவெளியில் 15 கொடிகள் நடப்பட்டுள்ளன. மூன்று கொடிகளுக்கிடையிலான தூரம் 8m எனின் வட்டவடிவ மைதானத்தின் நீளம் யாது?

1) 36m 2) 120m 3) 60m

28) ஒரு மைதானத்தில் நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை எனும் ஒழுங்கில் கொடிகள் நடப்பட்டுள்ளன. இங்கு 36 பச்சை நிறக்கொடிகள் காணப்படுவதுடன் இறுதிக்கொடியும் பச்சையாகும். எனின் இவ்வரிசையில் உள்ள மொத்த கொடிகள் எத்தனை?

1) 188 2) 180 3) 178

29) 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனில்

அவ்வருடத்தில் உள்ள சனிக்கிழமைகள் எத்தனை?

1) 52 2) 53 3) 55

30) ▭ + ▭ + □ = 75 எனின் □ இன் பெறுமானம் யாது?

1) 30 2) 15 3) 10

31) பின்வரும் கவிதையில் நான்கு வரிகள் மாறி அமைந்துள்ளன. அவற்றின் சரியான ஒழுங்கினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

A – பாலர் நாமும் வளர்வோம்

B - நூலகம் தினமும் சென்று

C – பாரினில் என்றும் உயர்வோடு

D – நல்ல நூல்களைக் கற்றுணர்ந்து


1) B D A C 2) ACDB 3) B C D A

32) ராமுவிடம் 2 ரூபாய், 5 ரூபாய் நாணயக் குற்றிகள் உள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபாய் 40.00 ஆகும் ராமுவிடம் உள்ள 5 ரூபாய் குற்றிகள் எத்தனை?

1) 5 2) 6 3) 8


KANTHASAMY SURESH 0775887044

33)



இவ் உருவில் சில சிறிய சதுரமுகிக் குற்றிகள் அடுக்கப் பட்டுள்ளன. இதனைப் பெரிய சதுரமுகி ஆக்கினால் மொத்தமாக எத்தனை சிறிய சதுரமுகிகள் இருக்கும்?

1) 27 2) 18 3) 9




34) மேலுள்ள உருவில் A, B, C என்ற சமபக்க முக்கோணியை ஆக்குவதற்கு 12m கம்பி தேவைப்பட்டது எனின், மீதியாகவுள்ள C, D கம்பித் துண்டிலிருந்து A, B, C யின் அளவுடைய எத்தனை முக்கோணிகளை ஆக்கலாம்?

1) 3 2) 1 3) 2

35) இலங்கையின் தேசிய பறவையாக காட்டுக்கோழி தெரிவுசெய்யப்பட்டமை.

1.இலங்கைக்கே உரித்தான பறவையாகக் காணப்படல்.

2.வேறு இலங்கைக்குரித்தான பறவைகள் எதுவும் இல்லை என்பதால்.

3.இப்பறவை இலங்கையிலேயே தோன்றியதாகக் கருதப்படுவதால்.

36) தேனீக்கள் தேன் கூட்டில் தேனை சேமித்து வைத்தல்.

1.மனிதர்கள் எடுத்துக்கொள்வதற்காக.

2.பூக்களில் மகரந்தச் சேர்க்கை இடம்பெற வேண்டும் என்பதால்.

3.தேன் கிடைக்காத போது அவை பயன்படுத்துவதற்காக.


37) மேசை ஒன்றின் மீது வைக்கப்பட்டுள்ள கடிகாரம் ஒன்று 9 மணியைக் காட்டுகின்றது. அதில் உள்ள மணித்தியால முள் வடக்குத் திசையையும். நிமிடமுள் கிழக்குத் திசையையும் குறிக்கின்றது. எனின் கடிகாரம் 6 மணியைக் காட்டும் போது மணித்தியால முள் காட்டும் திசை யாது?


1) தெற்கு 2) வடகிழக்கு 3) மேற்கு


38) உண்மையான தாயக்கட்டை ஒன்றை 4 முறை மேல் நோக்கிப் போடப்பட்டபோது, ஒன்றுக்கொன்று வேறுபட்ட எண்கள் கிடைத்தன. எனின் கிடைத்த எண்களின் கூட்டுத்தொகையின் குறைந்தபட்ச பெறுமானம்.


1) 6　　　　2) 19　　　　2) 10

39) வெற்றுக் கூட்டில் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்யுங்கள்.





(1)



(2)


(3)

**கீழே உள்ள உருவினை அவதானித்து 40 ஆம் வினாவிற்கான விடையினைத் தெரிவு செய்யுங்கள்.**




40) இங்கு B எழுத்தினால் குறிப்பிடப்படும் பிராணி யாது?

(1) 

(2) 

(3) 

# 2024 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு வினாத்தாள்



**ஆசிரியர். திரு.க.சுரேஸ்**
**மட்/மட்/கிரான்குளம் விஷ்ணு வித்தியாலயம்**
**பகுதி ii**



**மாணவர் பெயர் :-** **1** **நேரம் :- 1 மணி 15 நிமிடம்**

**01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

அவை அழகான கோழிக்குஞ்சுகள் தோட்டத்தில் அங்குமிங்கும் உலாவித் திரிந்தன. கொக்……கொக் என்று சத்தமிட்டன. தமது சிறிய சிறகுகளை அடித்தவாறு தாயின் பின்னே விரைவாக ஓடின. பசுத்தோல் போர்த்த புலி போல உலாவும் விலங்குகளால் ஆபத்து என்பதை அவை அறியவில்லை. தொடர்ந்து அக்குஞ்சுகள் பசும் புல்வெளிக்குச் சென்று உலாவின.

**பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

1. பந்தியில் உள்ள பெயரடைமொழிச் சொல் யாது? …………………………………………........
2. மிருதங்கம் செய்வதற்கு பயன்படுத்தப்படுவது யாது? …………………………………...........
3. “பயன்கருதி மாறு வேடம்” எனும் கருத்தை குறிப்பதை பந்தியில் இருந்து எழுதுங்கள்?

   …………………………………………………..........................

4. “சத்தமிடுகின்றன ” என்பதன் இறந்தகாலச் சொல்லை எழுதுக? ……………………………........
5. பன்மை, படர்க்கை, பெயர்ச்சொல்லை எழுதுங்கள்? ……………………………………................
6. பந்தியில் உள்ள உவமானத்தை எழுதுங்கள்? ……….............................................................

**02. உயர்திணை எதிர்கால ஒருமை வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. பறந்தது    2. வருவான்    3. படித்தார்கள்

03. **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

குறையுமானால் / தொட்டி நீரினுள் / ஒட்சிசன் / சோர்வடைந்து விடும் / மீன்கள்

……………………………………………………………………………………………………

04) **பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.**

i) கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் நம் முன்னோர்

ii) நீல நிறத்தொட்டி எதற்கு என ஆசிரியர் கேட்டார்

5) **பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

தொடர் பயிற்சியும் விடா முயற்சியும் வெற்றிக்கு வழி தரும்.

…………………………………………………………………………………………

**6) பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்.**

i) பதட்டம் - ……………………….. ii) ரோமம் - …………………………

**7) பின்வரும் உவமைத்தொடர்களின் கருத்துக்களை எழுதுங்கள்.**

i) பசுமரத்தாணி போல - …………………………………………………………………

ii) நீர் மேல் எழுத்துப் போல - ……………………………………………………………

**8) பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.**

i) நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசிய வழி - ……………………………………..


ii) ஒருவராலும் படைக்கப்படாமல் தானே தோன்றுவது - ……………………………………..

**9) பின்வரும் சொற்களைச் பிரித்து எழுதுக.**

i) தேங்காய் - ……………………… ii) தேனீர் - …………………………

10) **பின்வரும் குறியீடுகளின் கருத்தினை எழுதுங்கள்.**

i)



ii)



………………………………….. …………………………

11) i) **75ஆவது ஆண்டு நிறைவின் போது கொண்டாடப்படும் விழா யாது?**

………………………………………………

ii) தென் அமெரிக்க மக்களால் கூச்சி என அழைக்கப்பட்ட தாவரம் யாது?

……………………………………….

12) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

i) கையும்………………………………….. ii) நீட்டி………………………………….

K.SURESH

13) **ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Electricity : ........................................ ii) light : ..........................................

14) தரப்பட்ட சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) தொளஹு - ………………………… வித்தியாகாரய - …………………………...

15) பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

i) my / is / This/ father - ..................................................................................................

ii) have / I / ten / rupees - ..................................................................................................

16) **தரப்பட்ட தமிழ் வாக்கியத்தின் சிங்களக் கருத்தினை தமிழில் சொற்களுக்கான எழுதுக.**

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் - …………………………………………………………

( 32 புள்ளிகள் )

17) 6809 எனும் எண்ணை எழுத்தில் எழுதுக.

………………………………………………………………………………………………

18) 10 லீற்றர் 500 மில்லி லீற்றர் நீர் கொள்ளக்கூடிய தொட்டியில் 5 லீற்றர் 250 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சிய பகுதியை நிரப்ப தேவையான நீரின் அளவு யாது?

..................................................................

19)



250ml


3 லீற்றர் தேங்காய்எண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்கு எத்தனை தடவைகள் இப்பாத்திரத்தினால் அளக்க வேண்டும்?

.......................................

20) புகையிரதம் ஒன்றில் 508 பிரயாணிகள் பயணம் செய்தனர். தரிப்பிடம் ஒன்றில் 109 பிரயாணிகள் இறங்கியதும் 294 பிரயாணிகள் ஏறினர். எனின் புகையிரதத்தில் எத்தனை பிரயாணிகள் இருந்திருப்பர்?

...........................................................................................

21) 949 இனை 9 இனால் வகுக்கும் போது கிடைக்கும் மீதி யாது? …………………..



22) கட்டத்தில் உள்ள இலைகளின் எண்ணிக்கையை உரோமன் எண் குறியில் காட்டுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவைப்படும்.


………………………………………………..

K.SURESH

23) நகரம் A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 7 km 750m ஆகும். நகரம் B இலிருந்து நகரம் C வரையுள்ள தூரம் 4km 900 m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்த தூரம் யாது?

…………km ……….m

24) தரம் 5 வகுப்பில் உள்ள மாணவர்கள் விரும்பும் பாடங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் தரப்பட்டுள்ளது.





1) தமிழ்ப்பாடத்தினை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஆங்கில பாடத்தை விரும்பும் மாணவர்களின் 2 மடங்காகும். அதனை வரைவில் குறித்துக் காட்டுங்கள்.

……………………………………………..

2) தரம் 5 வகுப்பல் உள்ள மாணவர்கள் எத்தனை?

……………………..

25)




இவ்விரிப்பை மடித்து இணைக்கும் போது கிடைக்கும் திண்ம உருவின் பெயர், விளிம்புகளின் எண்ணிக்கையை முறையே தருக?

……………………………………………………………………

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | 1kg இன் விலை | | வாங்கிய அளவு | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| சீனி | 127 | 50 | 2kg | 1)………. | …….. |
| தேயிலை | (2)………. | ……… | 100g | 120 | 00 |
| பருப்பு | (3)……… | ………. | 250g | 65 | 50 |
| மொத்தப் பணம் | | | | 4)……… | …….. |



27) உருவில் காணப்படும் செங்கோணங்கள் எத்தனை?

.................................

28) ஒரு மாணவன் குறித்த ஒரு வீட்டில் இருந்து வடக்கு நோக்கி 50m சென்று அங்கிருந்து வலது புறமாக 100m சென்று, அங்கிருந்து தெற்கு நோக்கி 50m சென்று சந்தையை அடைந்து மீண்டும் அதே வழியாக வீட்டிற்கு வந்தான். எனின் அவன் பயணம் செய்த மொத்த தூரம் யாது?

……………………………………………………….

29) ஒரு புத்தகத்தின் விலை ரூபாய். 149.00 எனவும் ஒரு பென்சிலின் விலை ரூபாய். 27.50 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

i) 3 புத்தகத்தையும் 3 பென்சிலையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?

........................................................

ii) இரண்டு புத்தகங்களையும் ஒரு பென்சிலையும் வாங்கிக்கொண்டு ரூபாய் 1000 நாணயத்தாளொன்றைக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

…………………………………… ( 30 புள்ளிகள் )

**இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. 'இலவசக் கல்வியின் தந்தை' என அழைக்கப்படுபவர்.
   (1) கலாநிதி. ரீ.பி.ஜாயா
   (2) கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி
   (3) கலாநிதி. சி. டபிள்யு டபிள்யு கன்னங்கரா

31) கிழங்கு வகைகளில் கரட் ஆனது இனப்பெருக்கம் செய்யும் முறை
   (1) தண்டின் மூலம் (2) வித்தின் மூலம் (3) வேரின் மூலம்

32) கபலித்தாவை புளிய மரம் காணப்படும் மாவட்டமும் மாகாணமும் முறையே.
   1) அனுராதபுரம், வடமத்திய
   2) மொனராகலை, ஊவா
   3) இரத்தினபுரி, சப்ரகமுவ

33) கப்ரன்டோசன் கோபுரம் காணப்படும் இடம்.
   1) லூல்கந்துர 2) கடுகண்ணாவை 3) கபலித்தாவை

34) முட்டையிட்டு குஞ்சு பொரித்து பாலூட்டும் பிராணி.
   1) அணுங்கு 2) வௌவால் 3) கருங்குரங்கு



K. SURESH

35) நீரில் கரையும் பொருள் யாது?

1) மெழுகு 2) தேங்காயெண்ணெய் 3) வினாகிரி

36) ஒப்பநாயக்க பெருங்கொடி காணப்படும் மாவட்டமும் மாகாணமும் முறையே.

1) சப்ரகமுவ, மொனராகலை 2) இரத்தினபுரி, சப்ரகமுவ 3) மொனராகலை, ஊவா

37) இலங்கையில் காணப்படும் 2 மாவட்டங்களை மாத்திரம் கொண்ட மாகாணங்கள் எத்தனை?

1) 2 2) 4 3) 3

38) தேசியக்கொடி கமிட்டி, தேசியகீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்துவராக செயற்பட்டவர்.

1) டீ.பி ஜாயா 2) ஆதர் சி. கிளாக் 3) வன. எஸ். மகிந்த தேரர்

39) புற்றரை ஒன்றின் மீது போடப்பட்ட மரக்கட்டை ஒன்றை ஒரு வாரத்தின் பின்னர் எடுத்த போது மரக்கட்டையின் கீழ் இருந்த புற்கள்,

1) கடும் பச்சை நிறத்தில் காணப்பட்டன.
2) மஞ்சள் நிறத்தில் காணப்பட்டன.
3) ஆரம்பத்தில் இருந்தது போலவே இருந்தன.

40) அதிக வெப்பமான கோள் யாது?

1) புதன் 2) வெள்ளி 3) சனி

41) எண்ணெய் ஆட்டுவதற்கு பயன்படுத்தப்படுவது.

1) வனைசில்லு 2) துருத்தி 3) செக்கு

42)  படத்தில் காட்டப்பட்டுள்ள கூட்டினை அமைக்கும் பிராணி.

1) குளவி 2) தேன்சிட்டு 3) செவ்வெறும்பு

43) பின்வருவனவற்றுள் அலங்காரத் தையல் வகைகளை மாத்திரம் கொண்ட விடை எது?

(1) கம்பளித் தையல், பெரு நூலோடி
(2) சிறு நூலோடி, சங்கிலித் தையல்
(3) சங்கிலித் தையல், கம்பளித் தையல்

44) நான் எனது குடும்பத்திற்கும் வீட்டிற்கும் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன்'' என்பது, மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எப் படிமுறையாகும்?

1) உடலைத் தளர்த்துதல் 2) உள்ளத்தைத் தளர்த்துதல் 3) திடசித்தம்

K.SURESH

KANTHASAMY SURESH 0775887044

45) உலக மரபுரிமையாகக் கணிப்புப் பெற்றுள்ள மகாபோதி விருட்சம் அமையப் பெற்றுள்ள மாவட்டம், மாகாணம் முறையே,

1) அனுராதபுரம், வடமத்திய
2) மொனறாகலை, ஊவா
3) இரத்தினபுரி, சப்பிரகமுவ

46) பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவையாக அமையக்கூடியது,

1) பிறப்புச் சான்றிதழ் பதிவு செய்தல்.
2) வதிவிடச் சான்றிதழ் வழங்குதல்.
3) சூழலைச் சுத்திகரித்தல்.

47) பின்வருவனவற்றுள் பாதுகாப்பான சந்தர்ப்பம்,

1) மின்னல் மின்னும் வேளையில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்.
2) நில நடுக்கத்தின்போது திறந்த வெளிக்குச் செல்லுதல்.
3) புகையிரதத் தண்டவாளத்தில் நடத்தல்.

48) பின்வருவனவற்றுள் விரைவாக ஆவியாகக் கூடிய பதார்த்தம்,

1) தேங்காயெண்ணெய் 2) ஒலிவ் எண்ணெய் 3) பெற்றோல்

49) மாடுகளை வண்டிகளில் பிணைக்கப் பயன்படுத்தப்படுவது.

1) பொலி 2) நுகத்தடி 3) மூக்கணாங்கயிறு

50) முகம் பார்க்கும் கண்ணாடியில் பூசப்பட்டிருப்பது.

1) பாதரசம் 2) ஈயம் 3) கனியம்

51) நண்டின் இரத்தத்தின் நிறம்.

1) சிவப்பு 2) நீலம் 3) மஞ்சள்

52) குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைபரிசில் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தவர்.

1) டீ.பி ஜாயா
2) சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா
3) வன. எஸ். மகிந்த தேரர்

53) இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு.

1) 1978 2) 1996 3) 1945

54) ‘‘பாரத தேசத்தில் பிறந்திருந்தால் அவர் ஒரு தெய்வம் போன்று போற்றப்பட்டிருப்பார்’’ இதில் யாரைப் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

1) கலாயோகி ஆனந்த குமாரசாமி
2) சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா
3) வன. எஸ். மகிந்த தேரர்

55) தினமும் போதுமானளவு நீர் அருந்துவதன் மூலம் கிடைக்கும் பயன்,

1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்.
2) ஆரோக்கியமான சிறுநீரகம்.
3) உடலில் கொழுப்பு அதிகரித்தல்.

56) மிருதங்கம், வீணை செய்யப் பயன்படுத்தப்படும் மரம்.

1) வேப்பமரம் 2) பூவரசுமரம் 3) பலாமரம்

57) நூலக சபை பதிவுச் சான்றிதழ் குறியீடு.

1) ISBN 2) BSIN 3) BLSN



K SURESH

58) வினாகிரி தயாரிப்பதற்கான மூலப்பொருள் பெறப்படும் தாவரம்..

1) விளா 2) மாமரம் 3) தென்னை

59) ரிட்டிக்கல கந்தை மலை காணப்படும் மாவட்டம்.

1) கண்டி 2) பொலன்னறுவை 3) அனுராதபுரம்

60. சுத்தமானது எமது உடலுக்கும், உள்ளத்துக்கும் ஆரோக்கியத்தைத் தரும். "சுய சுத்தம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1) ........................................................................................................................................

........................................................................................................................................

2)........................................................................................................................................

........................................................................................................................................

3)........................................................................................................................................

........................................................................................................................................

K.SURESH